# யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

## முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 11
## First Term Examination – 2020 – Grade 11

| தமிழ்மொழியும் இலக்கியமும் | 22 | T | I, II | ஒரு மணித்தியாலம் One Hour |
|---|---|---|---|---|

சுட்டெண் Index No

## தமிழ்மொழியும் இலக்கியமும்

### பகுதி - I

❖ **மிகப் பெருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1. “தண்கய மாடு மகளிரோடு கை பிணைந்து....” இங்கு கயம் என்பது?
   1. யானை 2. குளம் 3. தாமரை 4. ஆடவர்

2. “புலங்களோடு கரணமும் ஆவியும் போந்து நின்ற....” இங்கு கரணம் என்பது
   1. மனம் 2. உடல் 3. உயிர் 4. முகம்

3. “அன்பின் நிறைந்தாளை உரை“ இங்கு அன்பு என்பதன் எதிர்ப்பதம்
   1. நிரன்பு 2. துன்பு 3. பேரன்பு 4. வன்பு

4. நாயனையார் கேண்மை தழீஇ கொளல்…” கேண்மை என்பதன் எதிர்ப்பதம்
   1. வாண்மை 2. நட்பு 3. பகைமை 4. ஆண்மை

5. “நெருங்கக் காண்பது கன்னலிற் செந்நெல்…” இங்கு கன்னல் என்பது
   1. நெல் 2. புல் 3. வாழை 4. கரும்பு

6. பின்வருவனவற்றில் பொருத்தமற்ற சொற்களின் இணைவு
   1. வாழை - கச்சல் 2. மா - பிஞ்சு 3. பலா - மூசு 4. பனை - நுங்கு

7. “பக்குல் பறந்ததாக சிலமன் இல்லை”
   “அந்தக் கோப்பு இருந்த சிலமன் கூட இல்லை”
   இக் கூற்றுக்களில் இடம்பெறும்சிலமன் என்னும் பேச்சு வழக்குச் சொல் உணர்த்தும் பொருள்
   1. காட்சி 2. கேள்வி 3. சாட்சி 4. அறிகுறி

8. வேட்கை, அவா, விழைவு என்ற சொற்களுக்கு நிகரான சொல்
   1. காதல் 2. பயம் 3. விருப்பம் 4. தாகம்

9. நவீன இலக்கியங்களில் நொன் பிக்சன் (Non Fiction) வகையிலான படைப்புக்கள் அதிக முள்ளன. இங்கே நொன் பிக்ஸன் என்பதற்குரிய கலைச்சொல்
   1. புனைவு சாரா 2. குறியாக்கம் 3. துன்பியல் 4. குறுநாவல்

10. தமிழின் இனிமையை உணர்த்தும் பொருத்தமான அருஞ்சொற்றொடர்
   1. அருமை பெருமையறிந்து 2. அமிழ்தினுமினிய
   3. சொல்நயம், பொருள் நயம் 4. பாலும் தேனும் போல



kalvi.lk

11. உப்பின்றிச் சமைத்த பச்சையரிசிச்சாதம்
    1. புளிச்சோறு  2. பொங்கல்  3. தயிர்சாதம்  4. அவிசு

12. குருவி கீச்சிடும் என்பது போல கோழி
    1. கேரும்  2. மிளற்றும்  3. கத்தும்  4. குறுகுறுக்கும்

13. அடிபிழைத்தல் என்ற மரபுத் தொடரின் பொருள்
    1. இடம்பெயர்தல்  2. தோற்றோடல்  3. நெறிதவறுதல்  4. பொழுதுசாய்தல்

14. தலையிலே அணியப்படும் மாலை
    1. கலம்பகம்  2. மங்கல மாலை  3. பொன்னரி மாலை  4. கண்ணி மாலை

15. ஒரு செயலைச் செய்வதற்குரிய அடிப்படை தகுதி இல்லாதவரால் அச் செயலைச் சிறிதேனும் செய்ய இயலாது என்பதைக் குறிக்கும் பழமொழி
    1. அச்சாணி இல்லாத் தேர் முச்சாணும் ஓடாது
    2. அச்சம் இல்லாதவன் அம்பலம் ஏறுவான்
    3. ஆடத் தெரியாதவனுக்கு மேடை கோணல்
    4. கனவிற்கண்ட பணம் செலவிற்குதவுமா?

16. "போதுமென்ற மனமே பொன் செவய்யும் மருந்து" என்ற பழமொழி மூலம் வலியுறுத்தப்படுவது
    1. நன்றியுணர்வு  2. திருப்தி  3. நிதானம்  4. மருந்து

17. முயற்சி செய்யாது வெறும் கற்பனை செய்தல் பயன்தராது. கற்பனை செய்தல் என்ற பொருளினை வெளிப்படுத்தி நிற்கும் மரபுத் தொடர்
    1. சிட்டாய்ப்பறத்தல்  2. கடுக்காய் கொடுத்தல்
    3. சிறகுகட்டிப்பறத்தல்  4. கச்சை கட்டுதல்

18. பின்வருவனவற்றுள் அடுக்கிடுக்குத் தொடராக அமைவது
    1. ஆடியாடி  2. பச்சைப்பசேல்  3. ஓடியாடி  4. நெறு நெறு

19. அ. ரவி நன்றாகப் படித்தான்
    ஆ. ரவி பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகவில்லை
    மேற்படி வாக்கியங்களை இதே ஒழுங்கில் இணைப்பதற்கு மிகப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்
    1. ஆகவே  2. என்றாலும்  3. ஆதலால்  4. ஏனெனில்

20. தமிழ் நெடுங்கணக்கிலுள்ள மொத்த குறில் எழுத்துக்கள்
    1. 5  2. 6  3. 95  4. 90

21. பின்வருவனவற்றுள் முற்றியலுகரமாக அமைவது
    1. பட்டு  2. காது  3. கதவு  4. அ∴து

22. யாப்பு என்ற சொல்லின் தனித்தனி எழுத்துக்களின் மொத்த மாத்திரை
    1. 3½  2. 3  3. 2½  4. 2

23. பின்வருவனவற்றுள் பகுதி விகாரப்பட்டு அமைந்த வினைச்சொல்
    1. படித்தான்  2. நடந்தான்  3. கண்டான்  4. உண்டான்

24. பின்வருவனவற்றுள் இருவேறுதொகையாக வரக்கூடியது
   1. குன்றக்குமுறல் 2. கருங்குயில் 3. மார்கழித்திங்கள் 4. பவளவாய்

25. பின்வருவனவறங்றுள் மூன்று மெய்கள் மயங்கி வர நிற்பது
   1. வாழ்க்கை 2. சால்பு 3. மஞ்சு 4. யாப்பு

26. பின்வருவனவற்றுள் போலி எழுந்தமைந்த சொல்
   1. அமச்சு 2. அரயர் 3. பைசல் 4. ஐந்நூறு

27. பின்வருவனவற்றுள் முற்றாகவும் எச்சமாகவும் அமையக் கூடிய சொல்
   1. ஆடு 2. நட 3. பறந்த 4. ஓடு

28. கடுகதி - என்பதில் வரும் கதி எனும் உரிச்சொல் உணர்த்தும் பொருள்
   1. பாதுகாப்பு 2. விரைவு 3. விவேகம் 4. நன்று

❖ **பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்றுள்ள சொற்தொகுதியை தெரிவு செய்க**

29.
   1. கூட்டுப் பெயர் - கடலலை, நூலகம், கொள்கலன்
   2. ஆக்கப் பெயர் - முதலாளி, எழுத்தியல், மலர்ச்சி
   3. தொழிற் பெயர் - ஆடுதல், நடவாமை, படித்தவன்
   4. மாற்றுப் பெயர் - அவள், நான், இது

30.
   1. முற்று வினை - ஓடினான், நடந்தான், உண்டான்
   2. பெயரெச்சம் - படித்த, ஓடிய, நடந்த
   3. வினையெச்சம் - நடந்து, பாடி, உண்ட
   4. வியங்கோள் வினை - ஓடுக, தருக, வாழிய

❖ **புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புங்கள். மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

31. நாட்டின் வரலாற்றையும் பண்பாட்டையும் உணர்த்துவனவாய் அமையும் தொல் பொருட்கள் ………………………… காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
   1. சுவடிகள் கூடத்தில் 2. நூதனசாலையில்
   3. களஞ்சிய சாலையில் 4. திறைசேரியில்

32. வேலைக்கு ஆள்சேர்ப்பது தொடர்பான அரசாங்கத்தின் உத்தியோக பூர்வ விளம்பரங்கள் பல ………………………………..
   1. வர்த்தமானியில் 2. வெள்ளையறிக்கையில்
   3. சுற்று நிருபத்தில் 4. பாராளுமன்றத்தில்

33. அகராதி ……………………………….. என்பன சொற்களை அகரவரிசைப்படுத்தி ஒழுங்குபடுத்தி அவற்றின் பொருளையும் விபரங்களையும் தரும் கருவி நூல்களாகும்
   1. இலக்கணம் 2. சுருக்கம் 3. கலைக்களஞ்சியம் 4. ஆவணம்

34. ……………………………….. என்பது மாட்டின் கழுத்தில் கட்டப்படும் நீளமற்ற கயிறாகும்
   1. கழுத்தணி 2. மாடா 3. நம்பு 4. வியாசம்



kalvi.lk

❖ **வாக்கியங்களின் முற்பகுதிக்கு பொருத்தமான முடிக்கும் பகுதியை தெரிவு செய்க**

35. உலகிலுள்ள தொழில் ஒவ்வொன்றும் தனித்துவமானதும் அத்தியாவசியமானதுமாக ………………………………..

1. விளங்குகின்றன  2. விளங்குகின்றது
3. அமைகின்றன  4. கொள்ளவேண்டியவை

36. மாணவர் குழுக்கள் ஊரூராகச் சென்று வெள்ள நிவாரத்திற்காக பொருட்களையும் பணத்தையும் ………………………………..

1. சேகரித்தன  2. சோ்த்தார்கள்  3. சேர்த்தார்  4. சேகரித்தனர்

❖ **தரப்பட்ட பாடலடியை மையமாகக் கொண்டு விடை தருக**

கானெலா மலர்ந்த முல்லை
  ககனமீ தெழுந்த தென்ன
வானெலா வயங்கு தாரை
  நிரை நிரை மலர்ந்து தோன்ற
வேனிலா விழவின் வைத்த
  வெள்ளி வெண் கும்பமென்ன
தூநிலா மதியம் வந்து
  குணதிசை தோன்றிற்றம்மா.

37. இப்பாடலில் வெளிப்படும் காட்சி

1. சூரியோதயம்  2. சந்திரோதயம்  3. கானகக் காட்சி  4. மாலைக்காட்சி

38. இங்கு குணதிசை எனச்சுட்டப்படுவது

1. மேற்கு  2. வடக்கு  3. கிழக்கு  4. தெற்கு

39. இப்பாடலில் கையாளப்பட்டுள்ள அணி

1. உவமை  2. உருவகம்  3. தற்குறிப்பேற்றம்  4. உயர்வு நவிற்சி

40. கீழே வாக்கியங்கள் ஒழுங்கின்றி காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெறவைத்தால் கட்டுக்கோப்பான பந்தி ஒன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க

அ. தால் என்பது நாவைக் குறிக்கும்
ஆ. இது நீலாம்பரி ராகத்தில் அமைந்திருக்கும்
இ. நாவை ஆட்டி இனிய ஓசை எழுப்பி குழந்தையை உறங்க வைப்பதால் இவ்வாறு அழைக்கப்படுகின்றது.
ஈ. நாட்டார் பாடல்களில் தாலாட்டுப் பாடல் சிறப்பிற்குரியது
உ. தாயின் உணர்வு வெளிப்பாடாக இப்பாடல் அமைகின்றது.

1. ஈ, உ, அ, இ, ஆ  2. அ, ஆ, இ, உ, ஈ
3. இ, ஆ, அ, ஈ, உ  4. ஆ. அ, ஈ. இ, உ



kalvi.lk

## பகுதி - II

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக**

01. சுருக்கமான விடை தருக

1. 'ஆறிடு மேடு மடுவும் போ லாஞ்செல்வம்'' என்ற தொடரை சந்தி பிரித்து எழுதுக.
2. ''ஆற்றோரத்தில் ஓர் ஆலமரம்'' இத்தொடரின் பயனிலை யாது?
3. குருவிக்கூடு, கடல், நன்மை, தொலைக்காட்சி என்ற சொற்களில் தனிப்பகுதியாக அமையும் சொல் யாது?
4. ''ஈடு ஒத்தி எதுவுமே இல்லை'' ஈடு என்ற சொல்லிற்குப்பதிலாக இலங்கையில் வழங்கும் வேறு சொல் யாது?
5. ''கா எல்லாம் உயர்ந்த தாழை கரையெல்லாம் கமழுந்தாழை'' இதில் வந்துள்ள தாழை என்ற சொல் விளக்கும் இரு வேறுபெயர்களையும் தருக?
6. ''பாம்பு தம்பியைக் கடித்தது" இச் செய்வினை வாக்கியத்தை "உண்" என்ற செயற்பாட்டுவினை விகுதியைப் பயன்படுத்தி செயப்பாட்டு வினையாக்குக.
7. பின்வரும் வாக்கியத்தில் காணப்படும் பொருள் மயக்கத்தை நீக்கி எழுதுக.
   இரண்டாயிரம் ரூபா பெறுமதியான ஓவியந்தீட்டுவதற்கான வர்ணங்கள் ஓவியரால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.
8. மூவகைப் போலியும் இடம் பெறும் சொல் ஒன்று தருக.
9. படு, பாடு என்பவைகளின் உகர வேறுபாட்டை தருக.
10. "தங்கச்சி விரல் சூப்பிக் கொண்டு அங்குமிங்கும் ஓடித்திருந்தது" பேச்சு வழக்கில் உள்ள இந்த வாக்கியத்தை எழுத்து வழக்கில்திருத்தி எழுதுக.

(20 புள்ளிகள்)

02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு கட்டுரை வரைக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்கு பொருத்தமான தலையங்கம் இடுக.

1. இன்று உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா வைரசால் உலக மக்களது பழக்க வழக்கங்கள் முற்றிலும் மாற்றமடைந்து வருகின்றது. உணவுகளில் மஞ்சள், மிளகு, இஞ்சி கலந்து கொள்ளுதல் கையெடுத்து கும்பிட்டு வணக்கம் செலுத்துதல், வீட்டின் வெளியில் சென்று வந்தால் கைகால் அலம்புதல் இவையாவும் தமிழர் பண்பாட்டின் கூறுகள் தாம். இவ்வகையில் தமிழர் பண்பாட்டின் முக்கியத்துவத்தைவிவரிக்கும் ஒரு விளக்கக்கட்டுரை.
2. அண்மையில் நீர் கலந்து கொண்ட கல்வி சுற்றுலாவின் போது நீர் தரிசித்த இடங்கள், கவின் மிகு காட்சிகள், சந்தித்த சமூகத்தவர்கள், அவர்களோடு பேசிப்பழகி பெற்ற அனுபவங்கள் முதலானவைகளை எடுத்துரைப்பதான ஒரு விவரணக்கட்டுரை.
3. இன்றைய நவீன தொடர்பாடல் சாதனங்களின் வளர்ச்சியால்உலகத்திற்கு நன்மையே விளைகின்றது எனக் கூறும் ஒருவருக்கும் இல்லை, நவீன தொடர்பாடல் சாதனங்கள் உலகத்திற்கு தீமையே விளைவிக்கின்றன. என மறுத்துரைக்கும் ஒருவருக்குமிடையிலான உரையாடல்.
4. "முற்பகல் செயின் பிற்பகல் விளையும்" பிறருக்கு தீங்கு செய்தவர் பின் நாளில் தீங்கையே அனுபவிப்பார். பிறரது கண்ணீருக்குக் காரணமானவர் பின்னர் தன் கண்ணீரக்கு தானே காரணமாவார். இதனை விளக்கும் ஒரு சிறுகதை.

(25 புள்ளிகள்)

03. பின்வரும் பந்தியினை 40 - 45 சொற்களில் சுருக்கி எழுதுக

நோன்புகள் உடல்நலனுக்கும் உள நலனுக்கும் உறுதுணை புரிகின்றன. நாளும் வேளை தவறாது உண்கிறோம். நாவின் சுவைக்காக கண்டவற்றை உண்கிறோம். வாய்ப்புகளும் விருந்துகளும் ஏற்படுமானால் எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவை உண்டுவிடுகிறோம். சுவைக்காக உண்ணும் பொழுது ஐம்புலன்களும் நம் கட்டுப்பாட்டிலிருந்து விலகி ஓடிவிடுகின்றன. பல்வேறு நோய்கள் நம்மிடம் ஓடிவந்து ஒட்டிக்கொள்கின்றன. நாம் மருத்துவர்களைத் தேடி அலைகிறோம் மனமோ தன்



kalvi.lk

விருப்பப்படி உண்டளவிற்கான சிற்றின்பத்தை நாடி நாயாக அலைகிறது.. நமக்கு நம் மனதின் மீதோ புலன்கள் மீதோ ஆட்சியில்லை மனமும் உடலும் ஒட்டாமல் வாழ்கிறோம்.

வாரத்திற்கு இருவேளைகளில் அல்லது மாதத்திற்கு ஒருநாளாவது உணவை நாம் முற்றிலுமாக நிறுத்தி நீர் மட்டும் பருகியிருந்தால் உடலில் ஜீரண உறுப்புகளுக்கு நல்ல ஓய்வு ஏற்பட்டு வலிமை ஏற்படுகின்றது. உண்ணா நோன்பால் பலநோய்கள் தீர்ந்து விடுகிறது.என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். முறையாக உண்ணா நோன்புகள் ஆயுளை நீட்டுகிறது என்றும் சொல்கிறார்கள்.

உண்ணாநோன்பு , அமைதி நோன்பு போன்ற நோன்புகளால் மனம் நன்கு கட்டுப்படுகிறது. மனக்கட்டுப்பாடு உள்ளவர்கள் மக்களின் மிகுந்த அன்பையும் மதிப்பையும் பெறலாம். மனக்கட்டுப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டால்கடினமான வேலைகளை எளிதில் செய்து விடலாம் மிக நுட்பமான அறிவுகளும் கலைகளும் கைவரப் பெறலாம். பொய்யில் புலவர் "தவம் செய்வோர் வேண்டியவற்றையெல்லாம் வேண்டியவாறே பெறலாம்". என்று கூறுகிறார். மிக நுட்பமான நூல்களை யாத்த தொல்காப்பியர், பவணந்தி முனிவர், சிவஞான முனிவர், இளம்பூரணர் போன்ற இலக்கண மேலாளர்கள் எல்லாம் துறவிகளே இன்னும் இளங்கோ அடிகள், திருத்தக்க தேவர், நாலடியார், ஆசிரியர்கள், இராமலிங்கர் எல்லாம் நோன்பிகளே. பெரிய மகாத்மாக்களால் தான் இவை முடியும். நமக்கு முடியாது நமக்குத் தேவையுமில்லை என்று எவரும் எண்ண வேண்டியதில்லை

(10 புள்ளிகள்)

04. பின்வரும் பக்தியினை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக .

தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்குமுள்ள பாரம்பரிய உறவு பிறழும் நிலையிலே புனைகதை தோன்றும் . தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்குமுள்ள உறவு முறைகள் அவற்றினடியாகத் தோன்றும். தனிமனிதப் பிரச்சினைகள் சமுதாய நிலைமை அந்நிலைமையையுணர்த்தும் மனித நடவடிக்கை சமுதாய மாற்றம் அம்மாற்றத்தால் மனித நடவடிக்கையில் ஏற்படும் மாற்றம் ஆகியன பற்றி பூரண அறிவுடனேயே நாவல்கள் எழுதப்படலாம் . ஒரு தனி மனிதனைக் கதாபாத்திரமாகக் கொண்டு அப்பாத்திரத்தின் வளர்ச்சியில் அல்லது இயக்கத்தில் முன்னர் குறப்பிட்ட சக்திகள் யாவும் எவ்வாறு தொழிற்படுகின்றன என்பதை உணர்ந்து அவற்றை அப்பாத்திரத்துடன் தொடர்புபடுத்தும் பொழுதுதான் நாவல் தோன்றுகின்றது . ஆனால் புனை கதைகள் முதன்முதலில் தோன்றுகின்ற அக்கால நிலையில் சமுதாய அமைப்பிலும் தனிமனித உறவு முறையிலும் ஏற்படும் எல்லா மாற்றங்களையும் பிரச்சினைகளையும் நன்கு அறிந்து கொள்வதற்கான வாய்ப்பும் அறிவுத்திறனும் எல்லா ஆக்க இலக்கிய கர்த்தாக்களுக்கும் இருக்காது . மேலும் நன்கு அறிந்து கொள்ளத்தக்க வகையில் இம்மாற்றங்களும் பிரச்சினைகளும் வெளியிலே தெரியவும் மாட்டா . வழக்கிலிருந்து வரும் கதை மரபின் வழியே நின்று புதிய மனித உறவுப்பிரச்சினைகளை கூறுவதற்கு " நெடுங்கதை " வகையினைக் கையாண்டாலும் அது வெற்றியாக அமையாது.

i) புனைகதை எப்போது தோன்றும் ?
ii) நாவல் எழுவதற்கு எத்தகைய அறிவு வேண்டும் ?
iii) எல்லா இலக்கிய கர்த்தாக்களும் அறிந்து கொள்ள முடியாத விடயங்கள் எவை ?
iv) நெடுங்கதை வகையைக் கையாண்டால் எத்தகைய பயனைப் பெறலாம் ?
v) வழக்கிலிருந்து வரும் கதை மரபு என்பதனை விளக்குக.

(10 புள்ளிகள்)

05. நன்னீர் தட்டுப்பாடு உலகளாவிய ரீதியில் சந்தித்துவரும் பெரும் சவாலாகும். எதிர்காலத்தில் நன்னீர் தேவை நோக்கியே மூன்றாம் உலகப்போர்இடம்பெறலாம் என வல்லுநர்கள் எதிர்வு கூறியுள்ளனர். எனவே நன்னீரை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி பத்திரிகையில் பிரசுரிக்குமாறு வேண்டிப் பத்திரிகை ஆசிரியருக்கு கடிதம் வரைக.

அல்லது

06. உமது பாடசாலையின் தமிழ் மன்ற செயலாளராக உம்மைக்கருதி, அண்மையில் இடம் பெற்ற "வழி" சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு தொடர்பான அறிக்கை ஒன்றினைத் தயாரிக்குக.

(15 புள்ளிகள்)



kalvi.lk

யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 11
**First Term Examination – 2020 – Grade 11**

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழ் மொழியும் இலக்கியமும் | 22 | T | III | இரண்டு மணித்தியாலம் **Two Hours** |

சுட்டெண் **Index No**

## தமிழ் மொழியும் இலக்கியமும்

பகுதி - **III**

01. சுருக்கமான விடை தருக
   1. அ. விவேக சிந்தாமணி எழுந்த காலம் யாது?
      ஆ. வெற்றி வேற்கை என்ற நூலை எழுதியவர் யார்?
   2. அ. வாக்குண்டாமின் மறு பெயர்யாது?
      ஆ. அந்நூல் வாக்குண்டாம் என அழைக்கப்பட காரணம் யாது?
   3. அ. திரிகடுகம் யாரால் இயற்றப்பட்டது?
      ஆ. திரிகடுகம் எனப்படும் மருந்துப் பொருட்கள் எவை?
   4. அ. இனியவை நாற்பது யாரால் பாடப்பட்டது?
      ஆ. பழுத்த வழக்கறிஞர் என்பதன் பொருள் யாது?
   5. அ. புகழேந்தி புலவர் எழுதிய நூல் எது?
      ஆ. வரோதயன் என்பதன் பொருள் யாது?
   6. அ. சவடாலாக என்பதன் அர்த்தம் என்ன?
      ஆ. பரிபாஷை என்றால் என்ன?
   7. அ. நாட்டார் பாடல்கள் வேறுஎப்பெயரால் அழைக்கப்படும்?
      ஆ. அரிவாளுக்காக பிடியாக அமையும் மரம் எது?
   8. அ. சினிமா மொழியின் மூன்று அம்சங்களும் எவை?
      ஆ. கண்ணிமைப்பது போல காட்சி மாறுதல் எவ்வாறு அழைக்கப்படும்.
   9. அ. பேதைமையின் மறுமைசெயலாக கூறப்படுவது எது?
      ஆ. சான்றோரின் அவையிலே பேதை நுழைவதைப்பற்றிய வள்ளுவரின் கருத்து யாது?
   10. அ. “இனி நினைந்து இரங்கும்” பாடலை எழுதியவர் யார்?
      ஆ. சேரன் செங்கட்டுவனின் தேவி யார்?

(20 புள்ளிகள்)

02. பின்வரும் பாடல்களையும் உரைப்பகுதியினையும் படித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

அ. உப்பில்லா கஞ்சியினை உண்ணும் அறுசுவை போல்
      தப்பிய கந்தை பீதாம்பரம் போல் - ஒப்பும்
   பனை யோலை பாயிற் படுத்துறங்கும் வாழ்வார்
      மனங்கொண்டது மாளிகை

   i. “மனங்கொண்டது மாளிகை” என்பதற்கு நிகராக வேறோர் பழமொழி தருக.
   ii. “பீதம்” என்ற சொல் குறிக்கும் நிறம் யாது?



kalvi.lk

ஆ. கழியும் பிழை பொருள் தள்ளிநன்னூலாங் கடலினுண்டு
வழியும் பொதிகை வரையினில் கால் கொண்டு வண்கவிதை
மொழியும் புலவர் மனத்தே இடித்து முழங்கி மின்னி
பொழியும் படிக்குக் கவிகாள மேகம் புறப்பட்டதே

i. பொதிகை வரைக்கும் தமிழுக்குமான தொடர்பினை விளக்குக.
ii. காளமேகப் புலவரின் வித்துவச் செருக்கு எவ்வகையால் வெளிப்படுகிறது.

இ. சுற்றத்தார் தேவரொடு தொழ நின்ற
கோசலையை தொழுது நோக்கின்
கொற்றத்தார் குரிசில் அவர் யாரென்று
குகன் வினவ கோக்கள் வைகும்
முற்றத்தான் முதற்தேவி மூன்றுலகு
ஈன்றானை முன்னீன்றானை
பெற்றத்தால் பெறும் செல்வம் யான் பிறந்த
லாற் துறந்த பெரியாள் என்றான்.

i. "மூன்றுலகு மீன்றான்" எனக் குறிப்பிடப்பட்டவர் யார்?
ii. தசரதச் சக்கவர்த்தியின் பெருமை எத்தகையது?

ஈ. அருணந்தி சிவாச்சாரியார் ஒரு பெரிய மகான் அவருக்கு ஒரு வகை வயிற்றுவலி இருந்தது. அவர் அந்த வலியை மாற்றாது தமது பிரார்த்தம் என்று கருதி அதை அனுபவித்துக் கொணடு வந்தார். மாணவர்களுக்கு பாடம் சொல்கின்ற போது மாத்திரம் அவர் தமது வலியை அங்க வஸ்திரத்தில் ஆவாகனம் பண்ணி பக்கத்தில் வைத்துவிட்டு பாடம் சொல்வது வழக்கம்.
i. நாவலருக்கும், அருணந்தி சிவாச்சாரியாருக்கும் இடையேயான ஒற்றுமைப் பண்பு யாது?
ii. பிரார்த்தம், ஆவாகனம் என்ற சொற்களின் பொருளை விளக்குக.

உ. இந்த சினிமா மொழிக்கும், மரபு எல்லாமே உண்டு இது வெகு காலமாக வளர்ந்து கொண்டு இருக்கிறது. தொழில் நுணுக்க வளர்ச்சியின் விளைவாகப் புதுப்புது சாதனங்கள் இந்த சினிமா மொழியை வளப்படுத்திய வண்ணம் இருக்கின்றன. மேநாடுகளில் ஹிட்ச்சாக், உடிஆலன் போன்றோரின் படைப்புக்கள் காணம் போது இதை உணரலாம்.
i. சினிமா மொழிக்கான இலக்கணம் என்பதால் விளங்குவது யாது?
ii. ஹிட்ச்சாக் அவர்களால் உருவாக்கப்பட்ட திரைப்படங்களில் தமிழில் நகலெடுக்கப்பட்ட இரு படங்களைத் தருக.

**03, 04 வினாக்களுக்கு கட்டாயம் விடை தருக. 5, 6, 7 என்பவற்றில் ஏதேனும் ஒன்றிற்கு விடை தருக.**

03. அ. வெற்றி வேற்கை பாடலில் இடம்பெறும் எடுத்துக்காட்டின் பொருத்தப்பாட்டை விளக்குக.
ஆ. பாரதியார் சுயசரிதையில் சமூகத்திற்கு கூறப்படும் செய்திகள் எவை?
(15 புள்ளிகள்)

04. அ. கம்பியூட்டர் சிறுகதையில் வெளிப்படும் நகைச்சுவைப் பண்புகளை தருக.
ஆ. குற்றாலக்குறவஞ்சியில் வெளிப்படும் இயற்கை வருணனையை விளக்குக.
(15 புள்ளிகள்)

05. நல்ல சினிமா ஒன்றின் பண்புகளாக கட்டுரை ஆசிரியர் எவற்றைக் குறிப்பிடுகிறார்.

06. இலட்சிய வாழ்வினால் உயர்வு பெற்ற கதாபாத்திரங்களை உதாரணத்தோடு விளக்குக.

07. குகப் படலத்தை அடிப்படையாகக் கொண்டு கம்பனின் கவித்துவத்தை விளக்குக.
(10 புள்ளிகள்)



kalvi.lk

Follow and Get papers Daily ..!

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page